பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | ஐப்பசி 22 | புதன்கிழமை | 09.11.2022 | கதிர் 256


## யாழ். அரச அதிபருக்கு சிறீதரன் எம்.பி. கடிதம்



யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 13 கமநல சேவை நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளில் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் தேவை கருதி, உரிய காலப் பகுதியில்

2

# தமிழ் அரசியல் கட்சிகள் விரைவில் ஒன்றாக வேண்டிய நிலைமை வரும்





### விக்கி பகிரங்கமாகத் தெரிவிப்பு; நிமாலுக்கு பதிலடி கொடுத்த சுமந்திரனுக்கும் பாராட்டு

எங்களுக்குள் ஒற்றுமை இல்லாத காரணத்தாலேயே தமிழர்களின் அரசியல் முடங்கிக் கிடக்க வேண்டிய நிலையில் உள்ளது. வெகு விரைவிலே தற்போதைய நிலையைப் பார்த்து – தற்போதைய சூழலைப் பார்த்து – பின் புலத்தைப் பார்த்து நாங்கள் அனைவரும் ஒற்றுமையடைய வேண்டிய கட்டம் வரும்.

2

## நான் ஜெனிவா செல்லும் நிலையை ஏற்படுத்தாதீர்

### அரசுக்கு மனோ எச்சரிக்கை



எனக்கு நமது பிரச்சினைகளை எடுத்துக் கொண்டு சென்னைக்குச் சென்று, நியூயோர்க்குக்குச் சென்று, ஜெனிவாவுக்குச் சென்று பேச விருப்பம் இல்லை. ஆனால், என்னை அந்த இடத்துக்குத் தள்ளி விட வேண்டாம் என்று அரசுக்கு எச்சரிக்கை விடுக்க விரும்புகின்றேன்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின்

8

## எதிரணி எம்.பிக்களை விலைக்கு வாங்குவதற்கு அரசு கடும் முயற்சி

### சபையில் சஜித் குற்றச்சாட்டு



எதிரணி அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க அரசு முயற்சித்து வருகின்றது என்று குற்றம் சாட்டிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாட்டையும் மக்களையும் ஏமாற்றும் அத்தியாயம் ஒன்று இன்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளது என் றும் சுட்டிக்காட்டினார்.

நாளுக்கு நாள் கூடி, விவாதங்களை நடத்தி, நாட்டை அலைக்கழித்து, கலைந்து செல்வதைத் தவிர நாட்டைக் கட்டியெழுப்பும் எந்தவொரு வேலைத்திட்டமும் அரசிடம் இல்லை

2

### வடக்கில் குவிந்துள்ள போதைப்பொருள்

## புலனாய்வுப் பிரிவினர் என்ன செய்கின்றார்கள்?

### சுரேஷ் சீற்றத்துடன் கேள்வி

(இ.கலையமுதன்)

கடற்படைக்கென தனியான புலனாய்வுப் பிரிவு, இராணுவத்துக்கெனதனியானபுலனாய்வுப் பிரிவு, பொலிஸ் புலனாய்வுப் பிரிவு, பயங்கரவாதத் தடைப் புலனாய்வுப்பிரிவுஎனபல்வேறு புலனாய்வுப் பிரிவினர் வடக்கு மாகாணத்தில் பரவலாக நிறைந்து போயிருக்கப்




போதைப்பொருள் இங்கு வருகின்றது என்றால் புலனாய்வுப் பிரிவினர் என்ன செய்கின்றார்கள்?

09

### இலங்கையில் 2 ஆவது குரங்கம்மை நோயாளி



இலங்கையில் மேலுமொரு குரங்கம்மை நோயாளி கண்டு பிடிக்கப்பட்டுள்ளார் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

2

## பாடசாலைகள் வன்மங்கள் – போதைகளால் சிதைக்கப்பட்டால் எதிர்காலம் சூனியமாகும்

### மாணவன் கிசோந்த்தின் மரணம் மன ரணத்தை ஏற்படுத்துகின்றது என்று ஸ்ரீநேசன் அனுதாபம்

அம்பாறை, தம்பிலுவில் வித்தியாலய மாணவன் சிவபாலன் கிசோந்த் மரணம் மன ரணத்தை ஏற்படுத்துகின்றது. பாடசாலைகள் வன்மங்களால், போதைகளால் சிதைக்கப்பட்டால் எதிர் காலம் சூனியமாகிவிடும்.


– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

09




## 458 கிலோ கஞ்சாவுடன் 2 படகோட்டிகள் கைது

### நெடுந்தீவுக் கடலில் கடற்படையினர் அதிரடி



(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 458 கிலோகிராம் கஞ்சா நெடுந்தீவுக் கடலில் இன்று காலை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

நெடுந்தீவுக் கடலில் சந்தேகத்துக்கிடமாகப் பயணித்த படகை வழிமறித்த கடற்படையினர் அதில் எடுத்துச் சென்ற 458 கிலோகிராம் கஞ்சாவையும் கைப்பற்றினர்.



இதன்போது கஞ்சாவை எடுத்து வந்த இரண்டு படகோட்டிகளையும்

2

## போதைப்பொருள் பாவனையிலிருந்து மாணவர்களை மீட்க ஒன்றிணைவோம்

### வடக்கு மாகாண ஊடக அமையம் அறைகூவல்

வடக்கு மாகாணத்தில் மாணவர்கள் சமூகத்திடம் வேகமாகப் பரவி வரும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த அரச அதிகாரிகள், பாதுகாப்புத்தரப்பினர் ஒன்றிணைந்து கூட்டு நடவடிக்கையை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்று வடக்கு மாகாண ஊடக அமையம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த அமையத்தால் இன்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

தமிழர்பகுதிகளில்மாணவர் சமூகத்திடம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் போதைப் பாவனையால் மாணவர் சமூகம்கல்விகற்கும்நிலையில் பல்வேறு தாக்கங்களையும், கலாசார சீரழிவுகளையும் ஏற்படுத்தி வருகின்றது. இது எதிர் காலத்தில் மாணவ

8

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


## தமிழ் அரசியல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
-இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

'Globe Tamil' செய்திச் சேவைக்கு அவர் வழங்கிய நேர்காண லின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களின் அரசியல் நிலை பின்னோக்கிச் செல்லும் விதத்தில்தான் உள்ளது. எங்களுக்குள் ஒற்றுமை மிகவும் அவசியம். ஆனால், அதற்கு நாங்கள் எப்போதும் இடம் கொடுப்பதில்லை.

எங்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளையும், வேற்றுமைகளையும் கூறிக்கொண்டு எங்களுக்குள்ளேயே பிரச்சினைப்பட்டுக் கொண்டிருக்கின்றோமே தவிர மக்களுக்கு என்னென்ன தேவை என்பது தொடர்பில் நாங்கள் நினைப்பதில்லை.

இப்போது நாங்கள் அரசியல் பேசத் தொடங்கி வெறும் பேச்சாகவே எங்களுடைய அரசியல் போய்க்கொண்டிருக்கின்றது.

நான் சுமந்திரன் எம்.பிக்குப் பாராட்டுத் தெவித்து ஒரு மின்னஞ்சல் அனுப்பியுள்ளேன்.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் கருத்துக்குச் சுமந்திரன் எம்.பி. வழங்கிய பதிலுக்காக அவரைப் பாராட்டி மின்னஞ்சல் அனுப்பியுள்ளேன்.

'வடக்கு, கிழக்குத் தமிழர்களின் தலைவர்கள் தங்களுக்குள் கட்சிகள், அணிகளாகப் பிரிந்து நின்றாலும், தேசிய இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வே ஒரே வழி என்பதில் மிக உறுதியாகவும், ஒருமித்த நிலைப்பாட்டிலும் உள்ளனர். எனவே, தமிழ்த் தலைவர்கள் பிளவுபட்டிருக்கின்றார்கள் என்று சாக்குப்போக்குக் கூறி, சமாளிப்பதை விடுத்து, சமஷ்டித் தீர்வுக்கு வழி பாருங்கள்' என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு நல்ல பதிலை வழங்கியுள்ளார் சுமந்திரன் எம்.பி.

நான் சுமந்திரன் எம்.பிக்குப் பாராட்டுத் தெரிவித்து அனுப்பிய மின்னஞ்சலுக்கு அவர் உடனே நன்றி தெரிவித்து எனக்குப் பதில் அனுப்பியுள்ளார்.

எங்களுக்குள் இருப்பவர்கள் என்ன நன்மையைச் செய்தாலும் நாங்கள் அதைப் பாராட்டுபவர்களாவே இருக்க வேண்டும்.

எந்த நேரமும் எங்களுடைய மக்கள் மத்தியில் அவர் முன்னுக்குச் செல்லக்கூடாது என்ற எண்ணத்தில் நாங்கள் வளர்ந்தோமானால் எந்தக் காலத்திலும் தமிழர்களுக்கான விடிவை நோக்கிச் செல்ல முடியாது. ஆகவே எங்களுக்குள் ஒற்றுமை மிகவும் அவசியம்.

அந்த ஒற்றுமை இல்லாத காரணத்தாலேயே தமிழர்களின் அரசியல் முடங்கிக் கிடக்க வேண்டிய நிலையில் உள்ளது.

வெகுவிரைவிலே தற்போதைய நிலையைப் பார்த்து - தற்போதைய சூழலைப் பார்த்து - பின்புலத்தைப் பார்த்து நாங்கள் அனைவரும் ஒற்றுமையடைய வேண்டிய கட்டம் வரும் என்பது என்னுடைய கருத்து - என்றார்.

## எதிரணி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்றும் அவர் சாடினார்.நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்துக்கு வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் யாது என வெளியிட வேண்டும். நாடு வீழ்ந்துள்ள வங்குரோத்து நிலையிலிருந்து மீட்கும் எந்தவொரு திட்டமும் அரசிடம் இல்லை.

போசாக்கின்மையால், பட்டினியால் சிறுவர்கள் வாடி பாடசாலைகளில் மயங்கி விழுகின்றனர். அவற்றை அம்பலப்படுத்தும் அதிகாரிகளுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

தற்போதைய ஜனாதிபதி நான்கு பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கைவசம் வைத்துக்கொண்டு ஜனாதிபதி பதவியைப் பெற்றுக்கொண்டதாகக் கூறியிருந்தார். அந்தப் பணம் தற்போது எங்கே உள்ளது?

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகள் கூட இன்று மாறினாலும் அரசின் கொள்கைகள் மாறாதுள்ளமை வருத்தத்தையும் துயரத்தையும் அளிக்கின்றது.

இத்தனைக்கும் மத்தியில் பல்வேறு எதிரணி அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க அரசு முயற்சித்து வருகின்றது. இந்த முட்டாள்தனமான அரசில் இணைவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து எவரும் தயார் இல்லை.

அரசியல் பொறாமையும் கபடமும் நிறைந்த அரசால் இந்நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. பொருளாதாரத்தைச் சுருக்கி நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்ற மாயையை முன்வைத்து அரசின் அமைச்சுப் பதவிகள் அதிகரிக்கப்படுகின்றன - என்றார்.

## 458 கிலோ ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடற்படையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் மண்டைதீவைச் சேர்ந்தவர் என்றும், மற்றையவர் நாச்சிக்குடாவைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## யாழ்.அரச ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர்களுக்கான மண்ணெண்ணையையும், பசளைகளையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், யாழ். மாவட்ட அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

கடந்த 2022.10.23, 29, 30 ஆம் திகதிகளில், மயிலிட்டி, வடமராட்சி, அத்தாய் மற்றும் தீவகப் பகுதி விவசாயிகளை நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தனித்தனியே சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

அந்தக் கலந்துரையாடல்களின் போது மேட்டுநிலப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளால் அவருக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை மேற் கோள் காட்டியே இந்தக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

## இலங்கையில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டுபாயிலிருந்து அண்மையில் நாடு திரும்பிய குறித்த நபர், தற்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக டுபாயிலிருந்து நாடு திரும்பியிருந்த ஒருவர், குரங்கம்மை தொற்றுடன் கடந்த 3 ஆம் திகதி அடையாளம் காணப்பட்டார்.

இவர் குரங்கம்மையுடன் இலங்கையில் அடையாளம் காணப்பட்ட முதலாவது நபராவார்.

களனிப் பகுதியைச் சேர்ந்த 20 வயதான அவர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

எவ்வாறாயினும் மங்கிபொக்ஸ் எனப்படும் குரங்கம்மை நோய் தொடர்பாக மக்கள் பீதியடையத் தேவையில்லை என்று சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இன்னும் திருந்தவில்லை தெற்கு

“நாட்டை அழித்து, இந்தக் குட்டிச்சுவர் நிலைக்கு அதனைக் கொண்டு வந்தவர்களே இன்று பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என்று கூக்குரலிடும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.”

– இப்படித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் நேற்று நாடாளுமன்றத்தில் கூறியிருக்கின்றார்.

உண்மைதான். வினை விதைத்தவர்கள் அந்த வினையை அறுவடை செய்ய வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டதனால் ஏற்பட்ட விபரீத நிலைமையே இது.

விளைவுகளின் விபரீதத்தால் – நெருக்கடிகளால் – தீர்வு குறித்து பேசுகிறார்களே தவிர, உண்மையான மனமாற்றத்தின் அடிப்படையில் எழும் குரல் அல்ல இது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் வேண்டும்.

சாணக்கியன் கூறுவது போல நாட்டை அழித்தவர்களே இன்று தீர்வு பற்றி பேசினாலும், அது அவர்களில் ஏற்பட்ட உண்மையான மனமாற்றத்தின் தெறிப்பு அல்ல.

இந்த அழிவுத் திசையில் அவர்கள் ஏன் செயற்பட்டார்களோ, அந்த இழிவு மனப்பான்மையிலிருந்து அவர்கள் மாறிவிடவில்லை. அழிவுகளால் ஏற்பட்ட நெருக்குவாரங்களில் இருந்து மீள்வதற்காக மட்டுமே அவர்கள் தீர்வு பற்றி இப்போது உரைக்கின்றார்கள். அது நெஞ்சார்ந்தமாக வெளிப்படும் நியாயமான தீர்வுக்கான அழைப்பு அல்ல.

இலங்கை சுதந்திரம் பெற்ற கையோடு பௌத்த, சிங்கள பேரினவாதம் முதலில் செய்த வேலை இந்த நாட்டின் முதுகெலும்பாகத் திகழ்ந்த மலையகத் தமிழ் சகோதரர்களின் குடியுரிமைகளைப் பறித்து 10 லட்சம் தமிழ் சோதரர்களை நாடற்றவர்களாக நட்டாற்றில் விட்டமைதான்.

அன்று தொட்டு, இன்று குறுந்தூர்மலை, வெடுக்குநாறி மலை போன்றவற்றின் ஆக்கிரமிப்பு வரை தொடர்வது பௌத்த, சிங்களப் பேரினவாதத் திமிர்த்தன செருக்கு எண்ணம்தான். இந்த மமதைச் செயற்பாடு இன்னும் மாறவில்லை.

இந்தப் பேரினவாத தடிப்போடுதான் அவர்கள் இப்போது தீர்வு குறித்து பேசுகிறார்கள்.

பௌத்த, சிங்களவர் அல்லாத இந்தத் தீவின் ஏனைய சிறுபான்மை மக்களையும், அவர்களது தனித்துவ பாரம்பரிய உரித்துக்களுடன், சகோதர இனமாக மதித்து, சம அந்தஸ்துடன் வாழ வைப்பதன் மூலம் இந்த நாட்டில் நீதியான தீர்வு ஒன்றை ஏற்படுத்தி, இணக்கமாக வாழ்வோம் என்ற நல்லெண்ணத்துடன் இந்தத் தீர்வுக்கான அழைப்பு விடுக்கப்படவில்லை.

தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு கண்டு, இந்தத் தீவின் ஏனைய சிறுபான்மை இனங்களுக்கும் நீதி செய்தால் மட்டுமே – நியாயமாக நடந்தால் மட்டுமே – நாட்டின் இப்போதைய மோசமான நெருக்கடியில் இருந்து மீள முடியும் என்ற உண்மை அவர்களுக்கு இப்போது சுடுகின்றது.

ஆனாலும், அந்த யதார்த்தப் புற உண்மையை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, அதனடிப்படையில் நீதி செய்யும் மனப்பாங்கு தென்னிலங்கை பேரினவாதத்திற்கு இன்னும் வரவில்லை என்பதுதான் உண்மை நிலைவரம் ஆகும்.

# 70 லட்சம் பேருக்கு உதவிகள் தேவை!

## இலங்கை தொடர்பில் ஐ.நா. கருத்து

பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து சுமார் 70 லட்சம் இலங்கையர்களுக்கு உதவி தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களின் ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

உணவுப் பாதுகாப்பின்மை, அச்சுறுத்தப்பட்ட வாழ்வாதாரங்கள், முக்கிய மருந்துகளின் பற்றாக்குறை மற்றும் அதிகரித்து வரும் பாதுகாப்புக் கவலைகள் ஆகியவற்றால் இணைந்த பல பரிமாண நெருக்கடியை இலங்கை தொடர்ந்து எதிர்கொள்கிறது என அந்த அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

மக்கள் தொகையில் கணிசமான பகுதியினர் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிரமப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பயிர் மற்றும் உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டு இயக்கத்தின்படி, இறக்குமதி பற்றாக்குறை, உயர்ந்து வரும் விலைகள், வாழ்வாதார இடையூறுகள் மற்றும் வீட்டு அளவிலான வாங்கும் திறன் குறைதல் ஆகியவற்றின் விளைவாக கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை வியத்தகு அளவில் உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

63 லட்சம் மக்கள், அல்லது மக்கள்தொகையில் 28 சதவீதம் பேர் மிதமான மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பற்றவர்களாகவும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், முறைசாரா வேலைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் குறைபாடுகள் உள்ளவர்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

# போதை பொருள்கள் கடத்தலில் வடக்கு மீனவர் ஈடுபடக்கூடாது

## நாகவிகாரையின் விகாராதிபதி அறிவுரை



வடக்கு மீனவர்கள் போதை பொருள் கடத்தலில் ஈடுபடக்கூடாது. அவ்வாறு ஈடுபடுவோர் தொடர்பில் தகவல் கிடைத்தால் அதனை தடுத்து நிறுத்த வேண்டும் என யாழ்ப்பாணம் ஆரிய குளம் நாகவிகாரையின் விகாராதிபதி வடக்கு மீனவர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

ஆரிய குளம் நாகவிகாரை விகாராதிபதியை வடக்கு மீனவர்கள் கடலட்டை விவகாரம் தொடர்பில் சந்தித்து கலந்துரையாடிய பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடபகுதியில் போதை பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. ஆனால் அந்த போதை பொருள் இந்தியாவில் இருந்து இங்கு கொண்டு வரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே கடற்தொழிலுக்கு செல்லும் மீனவர்கள் தமது படகுகளில் ஏதாவது போதை பொருள் கடத்தப்படுவது தொடர்பில் தகவல் இருந்தால் அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும். அத்தோடு மீனவர்களாகிய நீங்கள் யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் கடத்தலுக்குத் துணை போகக்கூடாது. இந்த விடயம் தொடர்பில் மீனவர்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.



# சிவசிதம்பரத்தின் 30 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுஷ்டிப்பு!

வன்னி தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தாமோதரம்பிள்ளை சிவசிதம்பரத்தின் நினைவு தினம் இன்று (புதன்கிழமை) காலை வவுனியா வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத்தூபியில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தமிழரசு கட்சியின் செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கம், நகரசபை உறுப்பினர் ந.கருணாநிதி , பிரதேசசபை உறுப்பினர் சந்திரசேகரம், வர்த்தகர்கள், சமூக சேவையாளர் கள், அரசியல் கட்சியின் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவச்சிலைக்கு மாலையிட்டு மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

வவுனியா தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர்.தாமோதரம்பிள்ளை சிவசிதம்பரம் அவர்களின் நினைவாக இச் சிலை நிறுவப்பெற்றுள்ளது.

ஞாபகார்த்த சிலை அமைப்புக் குழுவினரதும் அதன் தலைவர் நா.சேனாதிராசா ஆகியோரதும் வேண்டுகோளுக்கிணங்க வவுனியாவின் மூத்த சட்டத்தரணி முருகேசு சிற்றம்பலம் அவர்களினால் கடந்த 2015 ஆண்டு 07 ஆம் மாதம் 25 ஆம் திகதி இச் சிலை திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவத் தளம் மீது அதிரடித் தாக்குதல் பத்து சோமாலிய இராணுவ வீரர்கள் சாவு!




மொகாதிசு, நவ.09

சோமாலியாவின் கயிப் நகரில் உள்ள இராணுவத் தளத்தின் மீது நேற்று முன்தினம் மாலை தீவரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட திடீர் தாக்குதலில் 10 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 20 தீவிரவாதிகளும் சாவடைந்தனர்.

சோமாலியாவில் பல்வேறு பகுதிகளை தங்களது கட்டுப்பாட்டில்வைத்திருக்கும்அல்-கொய்தா அமைப்பினர் அரசுக்கு எதிராக தொடர்ச்சியாகப் பயங்கரவாதத் தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றனர். இவர்களை எதிர்த்துப் போராடி வரும் சோமாலியா இராணுவம் போராளி குழுக்களின் உதவியுடன் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளை மீட்டெடுத்து வருகிறது.

அந்த வகையில் சோமாலியாவின் மத்திய கல்காடுட் பிராந்தியத்தில் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்த கயிப் என்கிற நகரை நீண்ட போராட்டத்துக்கு பின் இராணுவம் கடந்த வாரம் மீட்டது. அதைத் தொடர்ந்து அந்த நகரில் இருந்து பயங்கரவாதிகள் விரட்டியடிக்கப்பட்டனர். இந்த நிலையில் கயிப் நகரில் உள்ள ராணுவ தளத்தின் மீது நேற்று முன்தினம் மாலை பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர்.

முதலில் வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட 2 கார்களை இராணுவத் தளத்தின் நுழைவாயில் மீது மோதி வெடிக்கச் செய்தனர்.

அதைத் தொடர்ந்து மோட்டார் சைக்கிள்களில் வந்த பயங்கரவாதிகள் இராணுவத் தளத்துக்குள் நுழைந்து சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினர். இதைத் தொடர்ந்து, இராணுவ வீரர்கள் தங்களது துப்பாக்கிகளால் அவர்களுக்கு தக்கபதிலடி கொடுத்தனர்.

இருதரப்புக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது. இந்தச் சண்டை பல மணி நேரத்துக்கு நீடித்தது. இறுதியில்இராணுவத் தளத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் 20 பேரும்

சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். அதே சமயம்

பயங்கரவாதிகளின் தாக்குதலில் 10ஈராணுவ வீரர்கள் பலியாகியிருந்தனர். மேலும் பல வீரர்கள் படுகாயம் அடைந்ததனர் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதற்கிடையில் இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்று அல்-பாப் பயங்கரவாத இயக்கம் வெளியிட்ட அறிக்கையில் தாக்குதலில் 37 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர் என்றும், ஏராளமான இராணுவ ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன எனவும்கூறப்பட்டுள்ளது. கடந்த மாத இறுதியில் சோமாலியா தலைநகர் மொகாதிசுவில் அல்-பாப் பயங்கரவாதிகள் நடத்திய இரட்டை கார் குண்டு வெடிப்பில்

120க்கும் மேற்பட்டோர் பலியாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கியூபா மீதான அமெ. தடைக்கு சர்வதேச நாடுகள் கண்டனம்




நியூயார்க், நவ.09

கியூபா மீது அமெரிக்கா விதித்துள்ள வர்த்தக மற்றும் பொருளாதார ரீதியான தடைகளுக்கு ஐ.நா. அமர்வில் சர்வதேச நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிடல் காஸ்ட்ரோ தலைமையிலான மாபெரும் புரட்சிக்குப் பிறகு, கியூபாவில் உள்ள அமெரிக்கர்கள் மற்றும் அமெரிக்க நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்கள் தேசிய மயமாக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளை தொடர்ந்து 1962 ஆம் ஆண்டு, அமெரிக்கா மற்றும் கியூபா இடையிலான வர்த்தகத்தைத் தடைசெய்யும் நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு பொருளாதாரக் கட்டுப்பாடுகளுடன் கூடிய தடைகளை கியூபா மீது அமெரிக்கா விதித்திருந்தது.

அமெரிக்க ஜனாதிபதியான பராக் ஒபாமா தனது பதவிக் காலத்தில் கியூபாவுடனான பதற்றங்களைத் தணிக்க கணிசமான நடவடிக்கைகளை எடுத்தார். ஆனால் அடுத்து வந்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், கியூபா மீதான பொருளாதார தடைகளை மீண்டும் தீவிரப்படுத்துவது உள்ளிட்ட கடுமையான அணுகுமுறைகளை மேற்கொண்டார்.

இந்த நிலையில் ஐ.நா. சபையில் அமெரிக்காவின் தடை நடவடிக்கைகளுக்கு எதிராக கியூபா வரைவு தீர்மானத்தை சமர்ப்பித்தது. இந்த தீர்மானத்தை ஆய்வு செய்யும் கூட்டத்தில் சிங்கப்பூர், டொமினிக்கா, பாகிஸ்தான் உள்ளிட்ட 185நாடுகளின் பிரதிநிதிகள், கியூபா சமர்ப்பித்த வரைவு தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதற்கு ஆதரவு தெரிவித்தன என்று கூறப்பட்டுள்ளது.

அத்துடன், கியூபா மீது அமெரிக்கா விதித்துள்ள வர்த்தக மற்றும் பொருளாதார தடைகள் சர்வதேச சட்டத்தை மீறுவது மட்டுமின்று மனிதாபிமானமற்ற நடவடிக்கை என்றும் சர்வதேச நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பாவில் கடும் வெப்பத்தினால் இந்த ஆண்டில் 15ஆயிரம் பேர் சாவு




ஜெனீவா, நவ.09

ஐரோப்பிய நாடுகளில் நடப்பு ஆண்டில்கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தியில், கடும் கோடை வெப்பத்திற்கு 15 ஆயிரம் பேர் வரை பலியாகி உள்ளனர் என உலக சுகாதார அமைப்புத் தெரிவித்து உள்ளது.

இதுபற்றி உலக சுகாதார அமைப்பின் மண்டல இயக்குனர் ஹான்ஸ் ஹென்றி குளுஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இதுவரை கிடைத்த தகவலின் படி, ஐரோப்பாவில் நடப்பு ஆண்டின் கோடை காலத்தில் 3 மாதங்களில், கடும் வெப்பத்திற்கு 15 ஆயிரம் பேர் உயிரிழந்து உள்ளனர். அவர்களில் ஜேர்மனி நாட்டில் அதிக அளவாக 4 ஆயிரத்து 500 பேர், ஸ்பெயின் நாட்டில் 4 ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

இங்கிலாந்தில் 3,200 பேரும், போர்த்துகல்லில் ஆயிரத்திற்கும் கூடுதலானோரும் உயிரிழந்து உள்ளனர் என்றும், இந்த எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என அவர் எச்சரிக்கை தெரிவித்து உள்ளார்.

ஏனெனில், இன்னும் பல நாடுகள் வெப்ப பாதிப்பிற்கு கூடுதலான மக்கள் உயிரிழந்த தகவல்களை அளித்து வருகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக, நடப்பு ஆண்டான 2022 ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி முதல் ஆகஸ்ட் 22 ஆம் திகதி வரையில் 11 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்து உள்ளனர் என பிரான்ஸ் நாட்டின் தேசிய புள்ளியியல் மற்றும் பொருளாதார படிப்புகளுக்கான அமைப்பு தெரிவித்து உள்ளது.

இது கொரோனா பெருந்தொற்று பரவலுக்கு முன்பு, கடந்த 2019 ஆம் ஆண்டுடன்ஒப்பிடும் போது அதிகம். இதற்கு, நடப்பு ஆண்டின் ஜுன் மாதத்தின் மத்தியில், முதலில் வெப்ப அலை தொடங்கி பின்பு, அது ஜுலை மாத மத்தியில் கடும் வெப்ப அலை பரவலானபோது அதனால் மக்களில் பலர் உயிரிழந்தனர். என அவர் தெரிவித்து உள்ளார்.

## நேபாளத்தில் நிலநடுக்கத்தில் வீடுகள் இடிந்து அறுவர் சாவு!

காத்மண்டு, நவ.9

நேபாள நாட்டில் இன்று அதிகாலை 1.57 மணியளவில் திடீரென நிலநடுக்கம்வஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவாகி உள்ளது. இந்நிலநடுக்கம் 10 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என தேசிய நிலநடுக்க அறிவியல் மையம் தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை நேபாள நாட்டின் தலைநகர் காத்மண்டுவில் ரிக்டரில் 4.5 அளவிலான நிலநடுக்கம் உணரப்பட்டது. இந்நிலையில்,டோட்டி மாவட்டத்தில் நிலநடுக்கத்தால் வீடு இடிந்து விழுந்ததில் 3 பேர் பலியாகினர் என முதல் கட்டத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்நிலையில், நிலநடுக்கத்தால் வீடுகள் இடிந்து விழுந்ததில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது என இப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.



# டெல்லியில் காற்று மாசு குறைந்தது அலுவலகங்கள் திரும்பவும் ஆரம்பம்



புதுடெல்லி, நவ.09

டெல்லியில் தீபாவளி பண்டிகையைத் தொடர்ந்து காற்று மாசு அதிகரித்து வந்தது. குறிப்பாக கடந்த வியாழக்கிமை முதல் காற்றின் தரக்குறியீடு 450 வரை எட்டி, சுவாசிக்க தகுதியற்றவை என்ற நிலையை அடைந்தது. காற்று மாசைக் கட்டுப்படுத்த டெல்லி அரசு பல்வேறு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்தக் காற்று மாசு அதிகரித்ததை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் செய்தியாளர்களை சந்தித்து, டெல்லியில் காற்று மாசு அதிகரித்து வரும் நிலையில் காற்றின் தரம் மேம்படும் வரையில் டெல்லியில் 5 ஆம் வகுப்பு வரை உள்ள தொடக்கப் பள்ளிகளுக்கு விடு முறை அளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

அதேபோல் காற்று மாசுவை குறைக்க 50 சதவிகிதம் அரசு ஊழியர்கள் காற்று மாசு குறைந்து இயல்பு நிலைக்கு திரும்பும் வரை வீட்டில் இருந்து பணியாற்றலாம் என டெல்லி அரசு அறிவித்தது. இதேபோல் தனியார் நிறுவனங்களும் தங்களது ஊழியர்களுக்கு வீட்டில் இருந்து பணியாற்றும் வாய்ப்பை வழங்க வேண்டும்வ்என்று அறிவுறுத்தப்பட்டது.

இந்த நிலையில், கடந்த இரண்டு நாள்களாக காற்றின் தரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டதன் விளைவாகத் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு இன்று பள்ளிகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த 5 நாள்களாக வீட்டில் இருந்து நிகழ்நிலை வாயிலாக மாணவர்கள் கல்வி கற்று வந்த நிலையில், இன்று மீண்டும் பள்ளிகளுக்குத் திரும்பியுள்ளனர்.

அதேபோல் அரசு ஊழியர்களுகளும் மீண்டும் அலுவலகம் வர அறிவுறுத்தப் பட்டுள்ளது. டெல்லியில் ஏற்பட்டுள்ள காற்று மாசிற்கு அண்டை மாநிலங்களில் பயிர்க் கழிவுகள் எரிக்கப் படுவதும், டெல்லியில் தனியார் வாகனங் களின் பயன்பாடு அதிகரிப்பும் காரணம் எனக் கூறப்படுகிறது.

## ஐம்புதாவது தலைமை நீதிபதியாக சந்திரசூட் இன்று பொறுப்பேற்றார்



புதுடெல்லி, நவ.09

நேற்று ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி யு.யு.லலித், தனக்கு அடுத்த தலைமை நீதிபதியாக டி.வை.சந்திரசூட்டை கடந்த மாதம் 11ஆம்திகதி மத்திய அரசுக்குப் பரிந்துரைத்தார். அதையடுத்து, டி.ஒய்.சந்திரசூட்டை தலைமை நீதிபதியாக நியமித்து ஜனாதிபதி திரவுபதி முர்மு கடந்த மாதம் 17ஆம்திகதி உத்தரவிட்டார்.

இந்நிலையில் உச்ச நீதிமன்றத்தின் 50 ஆவது தலைமை நீதிபதியாக சந்திரசூட் பொறுப்பேற்றார். டெல்லி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வில் அவருக்குவ்ஜனாதிபதி திரவுபதி முர்மு பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். 1959 ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் திகதி பிறந்தவரான சந்திரசூட், கடந்த 2016 ஆம் ஆண்டு மே 13 ஆம் திகதி உச்ச நீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றார்.

அவர் தலைமை நீதிபதியாக 2 ஆண்டுகளுக்கு, அதாவது 2024 ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம்திகதி வரை பொறுப்பு வகிப்பார். புதிய தலைமை நீதிபதி டி.வை. சந்திரசூட்டின் தந்தை வை.வி.சந்திரசூட்டும் இந்திய தலைமை நீதிபதியாகப் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.







## உலகப் பல்கலைக்கழகத் தர வரிசையில் 19 இந்திய பல்கலைகழகங்களுக்கு இடம்


புதுடெல்லி, நவ.09

சர்வதேச தரவரிசை கழகங்களில் ஒன்றான கியூ.எஸ். (குவாக்குவாரெல்லி சைமண்ட்ஸ்) அமைப்பு 2023ம் ஆண்டுக்கான ஆசிய பல்கலை கழகங்களின் முதல் 200 தரவரிசை பட்டியலை வெளியிட்டு உள்ளது. இதில், இந்தியாவின் 19 பல்கலை கழகங்கள் இடம் பெற்றுள்ளன. இதில் மும்பை ஐ.ஐ.டி மீண்டும் இந்த ஆண்டில் 40 ஆவது இடம் பிடித்து உள்ளது. டெல்லி ஐ.ஐ.டி. 46 ஆவது இடமும், பெங்களூரு ஐ.ஐ.எஸ்சி. 52 ஆவது இடமும் பிடித்து உள்ளன. தமிழகத்தின் சென்னை ஐ.ஐ.டி. 53 ஆவது இடம் பிடித்து உள்ளது.

இதுதவிர வேலூர் வி.ஐ.டி. 173 ஆவது இடமும், அண்ணா பல்கலைக்கழகம் 185 ஆவது இடமும் பிடித்து உள்ளன. இதே சமயம் காரக்பூர் ஐ.ஐ.டி. 61 ஆவது இடமும், கான்பூர் ஐ.ஐ.டி. 66 ஆவது இடமும், டெல்லி பல்கலைக்கழகம் 85 ஆவது இடமும் பிடித்து முதல் 100 கல்வி நிலையங்களின் வரிசையில் இடம் பெற்று உள்ளன.

இவற்றில் இந்தியாவின் 8 பல்கலை கழகங்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டில் முன்னேற்றம் அடைந்துள்ளன. அனைத்து இந்தியப் பல்கலை கழகங்களும் கல்வி பொது மதிப்பீடு மற்றும் சர்வதேச ஆராய்ச்சி பணியில் மேம்பாடு அடைந்து உள்ளன என தெரிவிக்கப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலாவது தனியார் ரொக்கட்டை விண்ணிற்கு அனுப்பும் இந்தியா!




புதுடெல்லி, நவ.9

கடந்த 2020 ஆம் ஆண்டு, விண்வெளித்துறை தனியாருக்கு திறந்து விடப்பட்டது. இந்தப் பின்னணியில், இந்தியாவின் முதலாவது தனியார் ரொக்கட், இம்மாதம் 12ஆம் திகதியில் இருந்து 16 ஆம் திகதிக்குள் விண்ணில் செலுத்தப்படவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதற்கு 'விக்ரம்-எஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது. ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள 'இஸ்ரோ' ஏவுதளத்தில் இருந்து செலுத்தப்படுகிறது. ஐதராபாத்தை சேர்ந்த ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் என்ற தனியார் விண்வெளி ஸ்டார்ட்அப் நிறுவனம், இந்த ரொக்கட்டை தயாரித்துள்ளது.

வணிக நோக்கத்தில், ரொக்கட் மூலம் செயற்கைகோள்களை செலுத்தத் திட்டமிட்டுள்ளது. 'விக்ரம்–எஸ்' ரொக்கட்டில் வாடிக்கையாளர்களின் 3வ்சுமைகள் ஏற்றி அனுப்பப்படுகின்றன. வானிலையை பொறுத்து, ரொக்கட் ஏவப்படும்வ்சரியான திகதியை அதிகாரிகள் தீர்மானிப்பார்கள் என்று ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனம் கூறியுள்ளது.

இதன்மூலம், விண்வெளிக்கு ரொக்கெட் ஏவிய முதலாவது தனியார் நிறுவனம் என்ற பெருமையை ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் பெறுகிறது.

# மட்டக்களப்பு விவசாயத் திட்டங்கள் பெருவெற்றி என அமைச்சர் திருப்தி



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் பாரிய வெற்றியைப் பெற்றுத் தந்துள்ளன எனவும் எதிர்காலத்தில் இன்னும் பல திட்டங்களை முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட களுவாஞ்சி குடியில் விவ சாய அமைச்சின் உதவி திட்டத்தின் கீழ் முன்னெடுக் கப்படும் மாதுளம்பழ செய்கையை அமைச்சர் பார்வையிட்டார். நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் கீழ் வெளிநாடுகளுக்கு ஏற்று மதி செய்யும் வகையில் இந்த மாதுளம்பழ செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.


அதனை தொடர்ந்து நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான டிராக்டர்கள் அமைச்சரினால் கையளிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிகுடி, செங்கலடி, வெல்லாவெளி, களுதாவளை, அம்பாறை மாவட்டத்தின் கோமாரி ஆகிய பகுதிகளில் நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் கீழ் முன்னெடுக் கப்படும் மாதுளம்பழ செய்கை, வாழைப்பழ செய்கை, கொச்சிக் காய் செய்கையாளர்களுக்கு இந்த இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா ஜகம்பத், மட்டக்களப்பு மாவட் அரசாங்க அதிபர் கே.கருணாகரன், களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரெட்னம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது 05 விவசாயிக ளுக்கான காணி உறுதிகள் வழங்கப்பட்டன. கடந்தகால வெள்ளம் மற்றும் வறட்சி காரணமாகப் பாதிக்கப்பட்ட 15 விவசாயிகளுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவும் வழங்கிவைக் கப்பட்டது.

# தமிழ் மொழி தினப் போட்டியில் கிழக்கு மாகாணம் முதலிடத்தில்



அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப் போட்டிகள்
தேசிய மட்டம் - 2022
இறுதிப் பெறுபேறுகள்

பதக்கங்கள் பற்றிய விபரங்கள்

| தொ இல | மாகாணம் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் | மொத்தம் | நிலை |
|---|---|---|---|---|---|---|
| 01 | கிழக்கு | 07 | 06 | 09 | 22 | 1 |
| 02 | வடக்கு | 10 | 05 | 05 | 20 | 2 |
| 03 | மேல் | 05 | 07 | 01 | 13 | 3 |
| 04 | மத்திய | 03 | 04 | 05 | 12 | 4 |
| 05 | ஊவா | 01 | 04 | 05 | 10 | 5 |
| 06 | சப்பிரகமுவ | 02 | 01 | 02 | 05 | 6 |
| 07 | வடமேல் | 01 | - | 02 | 03 | 7 |
| 08 | தென் | - | 02 | - | 02 | 8 |
| 09 | வடமத்திய | - | - | - | - | - |

க. சேதுரட்ணம்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
தமிழ்மொழி அலகு
கல்வி அமைச்சு



(வி.ரி. சகாதேவராஜா)

கடந்த வாரம் இடம்பெற்று முடிந்த அகில இலங்கை தமிழ் மொழி தினப் போட்டியில் கிழக்கு மாகாணம் 22 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தைப் பிடித் துள்ளது.

7 முதலிடங்களையும், 6 இரண்டாம் இடங்களையும், ஒன்பது மூன்றாம் இடங்களையும் பெற்று 22 புள்ளிகளை பெற்றுள்ளது.

அதன்படி, இவ்வாண்டுக் கான முதலாம் நிலை மாகாணமாக கிழக்கு மாகாணம் தெரிவாகி உள்ளது.

கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தொடக்கம் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இது தொடர்பில் வாழ்த்து தெரிவிக்கப்படுகின்றது.

இம்முறை வடக்கு மாகாணம் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது .

10 முதல் இடங்களையும், 5 இரண்டாம், இடங்களையும் 5 மூன்றாம் இடங்களையும் பெற்று இருபது புள்ளிகளை பெற்று இரண்டாம் இடத்தில் அது இருக்கின்றது.

13 புள்ளிகளுடன் மேல்மாகாணம்மூன்றாம் இடத்தையும், 12 புள்ளிகளுடன்மத்தியமாகாணம் நான்காம் இடத்தையும், 10 புள்ளிகளுடன் ஊவா மாகாணம் ஐந்தாம் இடத்தையும், 5 புள்ளிகளுடன் சப்பிரகமுவ மாகாணம் ஆறாம் இடத்தையும், மூன்று புள்ளிகளுடன் வடமேல் மாகாணம் ஏழாம் இடத்தையும், இரண்டு புள்ளிகளுடன் தென் மாகாணம் எட்டாம் இடத்தையும் பிடித்துள்ளன. வட மத்திய மாகாணத்தில் எந்த விதமான புள்ளிகளும் கிடைக்கவில்லை . இந்தபெறுபேறுகளை இலங்கை கல்வி அமைச்சின் தமிழ் மொழி அலகின் உதவிக் கல்விப் பணிப்பாளர் க. சேதுரட் ணம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளார்.

இதன்படி ,கிழக்கு மாகாணம் அண்மைக்காலமாக சகலதுறைகளிலும் முதலிடத்தை பிடித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

# மட்டு. முகத்துவாரம் வெட்டப்பட்டது





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)


மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்து வரும் கன மழை காரணமாக தாழ்நிலங்களும் பெரும் போகத்துக்காக விதைக் கப்பட்டுள்ள பல வயல்களும் வெள்ளத்தில் மூழ்குவதாக முன்வைக்கப்பட்ட விண்ணப் பத்தை அடுத்து, மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திற் குட்பட்ட முகத்துவாரம் நேற்று முன்தினம் திகதி மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரின் வழிகாட்டுதலின் கீழ் வெட்டப் பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகளிடம் பொதுமக் களும் விவசாயிகளும் முன் வைத்த விண்ணப்பத்தை அடுத்து பிரதேச செயலகம், மாநகர குசபை, நீர்ப்பாசனத் திணைக்களம், உள்ளிட்ட பல அரச நிறுவனங்கள் ஒன்றிணைந்து இந்நடவடிக்கையை முன்னெடுத்துள்ளன.

மட்டக்களப்பு வாவியில் கலக்கும் மழைநீரினால் வெள் ளப்பெருக்கு எற்படுவதைத் தவிர்ப்பதுடன் மழை நீரைக் கடலுக்கு வழிந்தோடச் செய்யும் வகையில் இதன்போது நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையின் போது நாடாளுமன்ற உறுப்பினர் கருணாகரம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன், நீர்ப்பாசன திணைக்கள பொறி யியலாளர் என்.நாக ரெட்ணம், மாநகரசபையின் பிரதி ஆணையாளர் உ.சிவராசா மற்றும் பல உயர் அதிகாரிகள், விவசாயிகள், மீனவர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். ஆற்றுவாய் வெட்டும் பணிகள் நேற்று முன்தினம் மாலை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

# மட்டு. மாநகர சபையின் பௌர்ணமி கலை விழா





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாநகர சபையின் கலை,கலாசார குழுவினால் மாதாந்தம் நடத்தப்பட்டுவரும் பௌர்ணமி கலைவிழா, நேற்று முன்தினம் மாலை கலை,கலாசார குழுத்தலைவரும் மாநகர சபை உறுப்பினருமான மா.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தார்.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் மாநகர சபை கீதம் இசைக்கப்பட்டு மௌன இறை வணக்கத்தை தொடர்ந்து கதிரவன் கலைக்கழக உறுப்பினர்களினால் தமிழ்மொழி வாழ்த்து இசைக்கப் பட்டு, அதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

எமது மண்ணுக்கே உரித்தான கலை கலாசார நிகழ்வுகள் கதிரவன் கலைக்கழகத்தினால் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டதுடன் கதிரவன் கலைஞர்களின் நகைச்சுவை நாடகம், தற்கால வாழ்க்கை சுகமானதா? சுமையானதா? எனும் தலைப்பில் கதிரவன் பட்டிமன்ற குழுவின் 101 ஆவது சிறப்பு பட்டிமன்றமும் இதன் போது அரங்கேற்றப்பட்டன.

இந்நிகழ்வில் மாநகர பிரதிஆணையாளர் உ.சிவராசா, மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் பெரும்திரளான பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாநகர சபையின் ஏற்பாட்டில் மாதாந்தம் முழுமதி தின கலை நிகழ்வு நடாத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# குரங்கு காய்ச்சல் நோயினால் கர்ப்பிணி பெண்களுக்குக் கருக்கலைப்பு வரலாம்!

## வைத்தியர் எச்சரிக்கை




குரங்கு காய்ச்சலைத் தடுப்பதற்கு முறையான கை கழுவுதல் மற்றும் சுத்தப்படுத்துதல் மிகவும் முக்கியம் என கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் ஆலோசகர் குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

மேற்கூறிய முறைகள் அடிப்படைத் தடுப்பு முறையாகப் பயன்படுத்தப்படும் என அவர் ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்தார்.

8 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு நோய்த் தொற்று ஏற்பட்டால், அது தீவிரமாக இருக்கும் என்றும் மேலும் கர்ப்பிணிப் பெண்களுக்கு கருக்கலைப்பு ஏற்படலாம் என்றும் அவர் எச்சரித்தார்.

பெரியம்மை மற்றும் சின்னம்மைக்கு இடையில் உள்ள ஒரு வைரஸ் குரங்கு வைரஸ் என்றும் அது கொப்புளங்களாகத் தோன்றும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குரங்கு அல்லது பெரியம்மைக்கு எதிரான தடுப்பூசி நாட்டில் இல்லை என்றும் எனவே அடிப்படை சுகாதார வழிகாட்டுதல்களைப் பேணுவது மிகவும் முக்கியம் என்றும் அவர் கூறினார்.

இந்த நோய் தோலில் இருந்தும் வாய் உட்பட சாதாரண தொடர்புகள் மூலமாகவும் பாலியல் தொடர்பு மூலமாகவும் பரவக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மக்கள் தங்கள் நெருங்கிய தொடர்புகளை 21 நாள்கள் வரை கண்காணிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

குரங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒருவர் பயன்படுத்தும் அதே படுக்கை, துண்டு அல்லது படுக்கை துணியால்கூட வைரஸ் பரவக்கூடும் என்றும் அவர் கூறினார். எனவே, வைரஸ் தொற்று ஏற்படாமல் இருக்க முறையான கை கழுவுதல் மற்றும் தூய்மை மிகவும் அவசியம் என அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, காய்ச்சலுடன் கூடிய சொறி, தோல் புண் போன்ற குரங்கு காய்ச்சலைப் போன்ற அறிகுறிகள் இருந்தால், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பாடசாலைக்கோ அல்லது வேறு எந்த பொது இடத்திற்கோ அனுப்ப வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டார்.








# பசுமை இயக்கத்தின் பழமுதிர்ச்சோலை மரநடுகை மாத செயற்றிட்டம் ஆரம்பம்!

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதச் செயற்பாடுகளில் ஒன்றாகப் பழமுதிர்ச்சோலை என்ற திட்டத்தை இந்த ஆண்டு முன்னெடுத்துள்ளது.

"ஆலயங்கள் தோறும் பழமரங்கள் நாட்டுவோம்" என்ற கருப்பொருளில் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் தொடக்க நிகழ்ச்சி திங்கட்கிழமை சம்பிரதாயபூர்வமாகப் பூநகரியில் இடம்பெற்றுள்ளது.

பூநகரி ஸ்ரீ சர்வவிக்கின விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், பொருளாளர் க. கேதீஸ்வரநாதன் ஆகியோர் கலந்துகொண்டு ஆலய அறங்காவலர் குழுவினர்களிடம் பழமரக்கன்றுகளை வழங்கியதோடு, மரக்கன்றுகளை நாட்டியும் வைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில் பூநகரி பிரதேசவைத்தியசாலை மருத்துவஅதிகாரிஸ்ரீ.அனந்தஸ்ரீயும்கலந்துகொண்டிருந்தார். தொடர்ந்து, பூநகரி ஞானிமடம் கொட்டிலுப் பிள்ளையார் ஆலயம் மற்றும் பூநகரி பிரதேச வைத்தியசாலைக்கும் பழமரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

வடக்கு மாகாணசபை 2014 ஆம் ஆண்டு கார்த்திகையை வடமாகாண மரநடுகை மாதமாகப் பிரகடனப்படுத்தியிருந்தது. கார்த்திகை மழைவீழ்ச்சிகூடிய மாதம் என்பதோடு தமிழ்த்தேசிய அரசியலிலும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாதமாகும்.

தமிழ்மக்கள் இறந்தவர்களின் நினைவாக மரங்களை நடுகைசெய்யும் பண்பாட்டு மரபைக் கொண்டுள்ளனர். மாவீரர்களை நினைவேந்தும் நாள்களும் இம்மாதத்திலேயே அடங்குவதால் இம்மரநடுகை மாதத்தைப் பொது அமைப்புகளும் பொதுமக்களும் ஆண்டுதோறும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாட்டாளிபுரத்தில் பண்பாட்டு விழா







(இரா.ரஜீந்திரமூர்த்தி)

மூதூர் – பாட்டாளிபுரம் கிராமத்தில் உள்ள காளி கோயில் வளாகத்தில் பண்பாட்டு விழா கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதன்போது தமிழர்களின் பாரம்பரியங்களை பிரதிபலிக்கும் கம்பு வீச்சு, கரகாட்டம் வில்லுப்பாட்டு, கவிஞர் பரம்சோதி கவியரங்கம், விவாதம் உள்ளிட்ட கலை நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

இந்நிகழ்வை இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனம் நெறிப்படுத்தியிருந்தது. இந்நிகழ்வின்போது ஊடகவியலாளர் எம்.என்.எம்.புஹாரி 'சமூக ஊடகர்' பட்டத்துடன் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இலக்கியவாதிகளின் கௌரவிப்பும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சரண்யா சுதர்ஸன் கலந்து சிறப்பித்தார். அத்தோடு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள சிரேஷ்ட கலாச்சார உத்தியோகத்தர், மூதூர் பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தர், இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் பொன்.சற்சிவானந்தம் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## நான் ஜெனிவா செல்லும்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் மனோ கணேசன் எம்.பி. நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டில் நலிவடைந்த பிரிவினர் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் ஆகியோர் நேற்று கூட்டாகக் கொண்டு வந்த கவனயீர்ப் புப் பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றிய தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது:–

இந்த நாட்டில் நாம் 1958, 1977, 1983 கால கட்டங்களில் இனவாதக் கலவரங்களைப் பார்த்துள்ளோம். 1971, 1988 ஆம் ஆண்டுகளில் தெற்கில் ஆயுதப் போரைப் பார்த்துள்ளோம். 2004 இல் சுனாமி அழிவைப் பார்த்துள்ளோம். அதன்பின் போருக்கு முகம் கொடுத்துள்ளோம்.

எதுவாக இருந்தாலும், எக்காலத்திலும் இன்றைய நிலைமையைப் போல் நமது மக்கள் நெருக்கடியைச் சந்திக்கவில்லை என எண்ணுகின்றேன். எக்காலத்திலும் மக்கள் எப்படியாவது மூன்று வேளையும் சாப்பிட்டார்கள். பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தபடி வாழ்ந்தார்கள். இந்தக் காலத்தில்தான் இப்படி மிகவும் மோசமான நெருக்கடிக்கு முகம் கொடுக்கின்றார்கள்.

நாம் இன்று இந்த யோசனையைக் கொண்டு வந்ததன் நோக்கம், இந்த நெருக்கடிக்குள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள பிரிவினரை அடையாளம் கண்டு அவர்களுக்கு நிவாரணங்களை ஏற்பாடு செய்யுங்கள் என்ற கோரிக்கையின்படி ஆகும்.

அது அரசின் கடப்பாடு. அரசு கடமைப்பட்டுள்ளது. எதிரணி என்ற முறையில் நாம் அதை அரசுக்கு எடுத்துக்கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

சபை தலைவரே, நான் அன்றும் சொன்னேன், இன்றும் சொல்கின்றேன். இன்று இந்த நாட்டில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு, துன்புறும், நலிவுற்ற பிரிவினர் தோட்டத் தொழிலாளர் ஆகும். இடதுசாரித் தலைவர் என்பதால் இது உங்களுக்கு நன்கு தெரியும்.

இதை நாம் எப்போதும் சொல்லி வந்தோம். யாரும் கவனத்தில் பெரும்பாலும் எடுக்கவில்லை. இன்று உலகம் சொல்ல ஆரம்பித்து விட்டது. இன்று ஐ.நா. அமைப்புகள் கூறுகின்றன.

ஐ.நா. உணவு விவசாய ஸ்தாபனம் தனது விசேட அறிக்கையில் என்ன கூறுகின்றது? இந்த நாட்டில் அதி கூடிய உணவின்மை நிலைமையால், அதிகம் வாழ்க்கை சுமையைச் சுமக்கும் பெண் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறுகின்றது. தோட்டப் புறத்தில் பெண்கள் மேலதிக சுமையைச் சுமந்து குடும்பங்களை நடத்துகின்றார்கள்.

அதேவேளை உலக உணவு நிறுவனம், தோட்டப் புறங்களில் உணவின்மை 51 விகிதம் எனக் கூறுகின்றது. நகரப் பகுதிகளில் 43 விகிதமும், கிராமப் பகுதிகளில் 34 விகிதமும் என கூறுகின்றது.

இந்த உணவின்மை என்பது ஜனாதிபதி தினந்தோறும் பேசும் ஒரு விடயம் ஆகும். நான் சொன்னது போன்று, மூன்று வேளை உணவு என்பது, இன்று இரண்டு வேளை ஆகிவிட்டது. இரண்டு வேளை சாப்பிட்டவர்கள் இன்று ஒருவேளைதான் சாப்பிடுகின்றார்கள். அது அதிகம் நிகழ்வது இங்கேதான்.

இதை இன்று நாம் கூறுவதை விட ஐ.நா. கூறுகின்றது. உலகம் கூறுகின்றது என்பதை அரசு அறிய வேண்டும். அதுமட்டுமல்ல, ஐ.நாவின் நவீன அடிமைத் துவத்துக்கான அறிக்கையாளர் டோமாயா ஒபகாடா, சமீபத்தில் நடந்து முடிந்த ஐ.நா. மனித உரிமை ஆணையக அவைக்கு அறிக்கை சமர்பித்துள்ளார்.

அவர் என்ன கூறுகின்றார்? இலங்கையில் பெருந்தோட்டங்களில் காணப்படும் ஒடுக்குமுறைக்குப் பின்னால் இனத்துவ காரணம் இருக்கின்றது எனக் கூறுகின்றார்.

பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் துன்பங்களுக்குக் காரணமாக அவர்கள் தொழிலாளர் என்பதை விட, அவர்கள் சிறுபான்மைத் தமிழர்கள் என்ற காரணமும் உள்ளது என அவர் கூறுகின்றார். இது ஒரு பாரதூரமான குற்றச்சாட்டு.

எனக்கு நமது பிரச்சினைகளை எடுத்துக் கொண்டு, சென்னைக்குச் சென்று, நியூயோர்க்குக்குச் சென்று, ஜெனிவாவுக்குச் சென்று பேச விருப்பம் இல்லை. ஆனால், என்னை அந்த இடத்துக்குத் தள்ளி விட வேண்டாம் என அரசுக்கு எச்சரிக்கை விடுக்க விரும்புகின்றேன்.

நாம் அநேகமான பாரபட்சங்களுக்கு முகம் கொடுக்கின்றோம். இங்கே கல்வி அமைச்சர் இருப்பதால் ஒன்றை அவர் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகின்றேன். நீங்கள் கல்வித்துறையில் பல புனர்மாற்றங்களைச் செய்கிறீர்கள். கொழும்பு நகர கல்வி வலயத்தை வட – மத்திய கொழும்பு வலயம் என்றும், தென் கொழும்பு வலயம் என்றும் இரண்டாகப் பிரிக்க நாம் முடிவு செய்துள்ளோம். அது நல்லது.

நுவரெலியாவில் நுவரேலியா, ஹட்டன், நோர்வூட், தலவாக்கலை ஆகிய நான்கு வலயங்கள் உருவாக வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். ஏனெனில், இன்றுள்ள நுவரெலியா, ஹட்டன் வலயங்களில் சுமார் 250 பாடசாலைகள் உள்ளன. 80 ஆயிரம் மாணவர்கள் உள்ளனர். ஆகவே நான்கு வலயங்கள் என்பது மிக நியாயமான கோரிக்கை. உண்மையில் எமக்கு அங்கே ஆறு வலயங்கள் வேண்டும். ஆனால், மூன்று வலயங்களுடன் முடித்து விட சிலர் முயல்கின்றார்கள்.

அதேபோல், நமது நல்லாட்சிக் காலத்தில் 2019ஆம் ஆண்டு வர்த்தமானி பிரகடனம் மூலம், புதிய பிரதேச செயலகங்கள், நுவரெலியாவில், மேலதிகமாக ஐந்தும், இரத்தினபுரியில் இரண்டும், காலியில் இரண்டும் அமைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

இதில் இரத்தினபுரி, காலி என்பவற்றில் புதிய பிரதேச செயலகங்கள் அமைக்கப்பட்டு விட்டன. ஆனால், நுவரெலியாவில் இல்லை. ஏன் இந்த அநீதி?

அதேபோல் நாட்டின் ஏனைய இடங்களில் 500 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர் பிரிவு சென்றால், பெருந்தோட்ட பகுதிகளில் 1000 முதல் 5000 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. ஏன் இந்த அநீதி?

இப்போது பொலிஸ் அதிகாரம் கிராம சேவகர்களுக்கு வழங்கப்படவுள்ளது எனக் கூறப்படுகின்றது. இந் நிலையில் இது என்ன பாரபட்சம்?

அடுத்த வருடம் 2023 ஆகும் போது இந்த மக்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு 200 வருடங்கள் நிறைவடையப் போகின்றன. இவர்கள் இங்கே நாடு பிடிக்க வரவில்லை. நாட்டை உருவாக்கவே வந்தார்கள். அவர்கள் இங்கே வந்த பாதையே ஒரு சோகப் பாதை. பல கதைகள் உள்ளன. வரும் வழியிலேயே 25 விகிதமானோர் இறந்து போனார்கள்.

இங்கே வந்து காடுகளை வெட்டி, இன்றுள்ள தேயிலை, இறப்பர் தோட்டங்களை உருவாக்கினார்கள். பின்னர் அந்தத் தேயிலை, இறப்பர் உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் கொழும்பு துறைமுகத்தை உருவாக்கவும் அவர்களது உழைப்பு பயன்பட்டது. பின்னர் மலைநாட்டுக்கும், கொழும்புத் துறைமுகத்துக்கும் இடையில் ரயில் பாதைகளை உருவாக்கவும், நெடுஞ்சாலைகளை உருவாக்கவும் அவர்களது உழைப்பு பயன்பட்டது.

200 வருடங்களாக உழைத்துக்கொண்டு இருக்கும் இம்மக்களுக்கு இந்த நாடு தரும் பரிசு என்ன? இங்கே தீர்வு, நியாயம் இல்லை என்பதால்தான் இவர்களது இன்றைய நிலைமையை ஐ.நா. அமைப்புகள் பேசும் நிலைமை ஏற்பட்டு விட்டது. இதை மாற்றுவோம். புதிதாகச் சிந்திப்போம்.

இலங்கை தேசிய தளத்தில் முழுமையான பிரஜைகளாக விரும்புவதை தவிர, சமீபத்தையை இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்களது அபிலாசைகள் வேறு ஒன்றும் இல்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

தேசிய நீரோட்டத்தில் எம்மை உள்வாங்குங்கள். இந்த நாட்டின் ஏனைய மக்களுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்ட மக்களுக்கு இன்று காணி உரிமை, வீட்டு உரிமை இல்லை. வறுமை அதிகம். மந்தபோசனம் அதிகம். வேலை வாய்ப்புகள் குறைவு. அவர்களது நிர்வாகக் கட்டமைப்புகள் தோட்ட நிர்வாகங்களிடம்தான் அதிகம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நாட்டின் ஏனைய மக்களைப் போல் அவர்களையும் மாவட்ட செயலக, பிரதேச செயலக, கிராம செயலக தேசிய நிர்வாகக் கட்டமைப்புக்கு உள்ளே கொண்டு வாருங்கள்.

ஆகவே, இன்று மலையகத் தமிழ் இனத்தின் உள்ளே வாழும் பெருந்தோட்டப் பிரிவினரை பின்தங்கிய பிரிவு மக்களாகக் கருதி அவர்களை தேசிய மட்டத்துக்குக் கைதூக்கி விடுங்கள் – என்றார்.

## போதைப்பொருள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமுதாயத்தை நோயாளிகளாக மாற்றுவதோடு பல்வேறு குற்ற நடவடிக்கைகள் அதிகரிக்கக் காரணமாக இருக்கும்.

அத்துடன் ஆண் – பெண் என்ற பேதமின்றி போதை என்ற அரக்கன் இளம் சமூகத்தின் சிந்தனை ஆற்றலை அழித்து கல்விச் செயற்பாடுகளில் அழிவுகளை ஏற்படுத்தும்.

போதைப்பொருள் மாத்திரைகளை விநியோகிக்கும் நடவடிக்கையில் ஒரு சில மருத்துவர்கள் ஈடுபட்டுள்ளதானது சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் இடையே பெரும் மன உளைச்சல்களையும் வேதனைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

உயிரைக் காக்கும் புனிதமான வைத்திய தொழில் செய்யும் வைத்தியர்களில் ஒரு சிலர் இளம் சந்ததியினரைக் குறிவைத்து போதைப்பொருள் மாத்திரைகளை விநியோகிப்பதுப் பெரும் அதிர்ச்சியை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

கல்விச் சமூகத்தைத் திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கைக்குத் துணை புரியும்சமூகவிரோதிகளை இனங்கண்டு அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வடக்கு மாகாண ஆளுநர் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன்வடக்குமாகாணஆளுநரால் ஒவ்வொரு மாவட்டங்களும் கண்காணிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வடக்கு மாகாண ஊடக அமையம் முன்வைக்கின்றது.

மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகுவதால், பெற்றோர்களின் இயல்பு நிலைமைகள் செயலிழந்துவருவதுடன்பொலிஸாரிடம் தங்கள் பிள்ளைகளைக் கையளிக்கும் அவலங்களும் நடைபெறுகின்றன.

போதைப்பொருள் பாவனையைத் தடுத்து நிறுத்துவதற்கு வடக்கு மாகாணத்தில் பணிபுரியும் அரச அதிகாரிகள் தமது கடமைக்கு மேலதிகமாகப் பணியாற்ற முன்வர வேண்டும்.

அத்துடன் பாதுகாப்புத் தரப்பினர் தமது மூலோபாய தந்திர நடவடிக்கைகளை வகுத்து போதைப்பொருள் வர்த்தகம் மேற்கொள்ளும் நபர்கள், விநியோகஸ்தர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அரச செயலகங்களில் பணியாற்றும் அதிகாரிகளையும் மற்றும் தொழில் சங்கங்கள், மகளிர் அமைப்புகள், விளையாட்டுக்கழகங்கள், ஆன்மீகவாதிகள் மற்றும் சமூகச் செயற்பாட்டு அமைப்புக்களை ஒன்றிணைத்து வட பகுதியில் மாணவ சமூகத்தில் பரவி வரும் போதைப்பொருள் பாவனையை முற்றாக அழித்தொழிக்க ஒருங்கிணைந்த வேலைத்திட்ட நடவடிக்கையை மேற்கொள்ள முன்வரவேண்டும் என்று வடக்கு மாகாண ஊடக அமையம் சம்பந்தப்பட்ட துறைசார்ந்த அமைப்புக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றது – என்றுள்ளது.





விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்–
076 443 8622

## பாடசாலைகள்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

கிழக்கு மாகாணத்திலுள் அம்பாறை மாவட்டப் பாடசாலைகளில் ஒன்றான தம்பிலுவில் வித்தியாலய மாணவன் சிவபாலன் கிசோந்த் சக மாணவனால் தாக்கப்பட்டு மரணமடைந்துள்ளான். இம் மாணவன் தரம் 8 இல் கல்வி பயிலும் 13 வயதுடைய சிறுவனாவான். இம்மரணம்ஒவ்வொருவரதுமனதையும் ரணமாக்கும் செயலாக அமைந்துள்ளது.

பள்ளிப் பராயம், மாணவ பராயம் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். அக்காலப் பதிவுகள் என்பது மறக்க முடியாத நினைவுகளாகும். ஆனால், சிவபாலன் கிசோந்த்தின் மரணம் என்பது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத கறைபடிந்த நிகழ்வாக அமைந்து விட்டது.

தாக்கிய மாணவனும் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான் எனத் தகவல்கள் கூறுகின்றன. என்ன நடந்தது? எப்படி நடந்தது? தடுக்க எவரும் இருக்கவில்லையா? ாணவன் மாணவனைத் தாக்கியதால் மரணம் எப்படி ஏற்பட்டது? இறந்த மாணவன் ஏற்கனவே நோயால் பாதிக்கப்பட்டவனா? என்று பல கேள்விகள் எழுகின்றன.

எது எப்படியாக இருந்தாலும் இந்தச் சம்பவம் கல்விச் சமூகம் மத்தியில் ஆழ்ந்த துரயத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோகைகளுக்கு என்றே ஆசிரிய நியமனங்கள் செய்யப்படுகின்றன. மாணவர்களை வழிப்படுத்துவதற்கான உளவியல் கல்வி, வழிகாட்டல் ஆலோசனைக் கல்வி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றன. மாணவ மையக் கல்வி தொடர்பான செயலமர்வுகள் என்று பல செய்யப்படுகின்றன. இருந்தும் இப்படியான மாணவ வன்முறை மூலமாக சக மாணவன் பாட சாலையில் மரணித்துள்ளான்.

மாணவன் ஒருவனின் ஆக்ரோசம் என்னும் மனவெழுச்சி எவ்வளவு தூரம் ஆபத்தாக மாறியுள்ளது என்பதை ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஆசிரியர்களின் வழிகாட்டல் ஆலோசனைச் செயற்பாடுகள் வலுவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை இந்தச்சம்பவம்கோடிட்டுக்காட்டுகின்றது.

மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலைச் சமரசம் செய்வதற்குச் சக மாணவர்கள் இல்லாமல் போனதும் துரதிஷ்டமாகவுள்ளது.

இதில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியது அதிகம் உள்ளது. மாணவர்களை ஆற்றுப்படுத்துவதற்கு விசேட மேலைத்திட்டங்கள் அவசியமாகவுள்ளன.

மாணவர்களை மையமாகக் கொண்டு போதைப்பொருட்கள் வியாபாரமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, விளையும் பயிர்களைப் பாதுகாப்பதற்குப் பெற்றோர்கள், பாதுகாவலர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள், மதத் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் அதிகூடிய கவனம் எடுக்க வேண்டியுள்ளது. இல்லையென்றால் எதிர்காலச் சந்ததியினர் தவறான பாதைகளில் சென்று விடுவார்கள். இனவாதத்தால், ஊழல் மோச டிகளால் நாடு சிதைக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளும் வன்மங்களால், போதைகளால் சிதைக்கப்பட்டால் எதிர்காலம் சூனியமாகிவிடும் – என்றார்.

**விளம்பரத் தொடர்புகளுக்கு –**
**தொலைபேசி இலக்கம்–**
**076 443 8622**

## புலனாய்வுப்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

–இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பினார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் போதைவஸ்து பாவனை என்பது போருக்குப் பின்னரே அறிமுகமானது. இன்று வரையும் யாழ்ப்பாணம் முப்படையினுடைய கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றது. இங்கு யார் என்ன செய்தாலும் படையினருக்கு உடனடியாகவே தகவல்கள் தெரியும்.

மஞ்சள் கடத்தப்படும் போது உடனடியாகப் பிடிக்கப்படுகின்றது. வேறு பொருட்கள் வரும் போது உடனடியாகக் கடத்தல் குழு பிடிக்கப்படுகின்றது. ஆனால் போதைவஸ்து வரும் போது அவ்வாறான நிலை காணப்படுவதில்லை.

கஞ்சா வரும் போது 200 கிலோ, 300 கிலோ, 400 கிலோ பிடிபடும் அதேநேரத்தில் வெளிப் பிரதேசத்தில் இருந்து பெருந்தொகை கஞ்சா வருகின்றது என அறியப்படுகின்றது.

கடற்படையினர் இந்திய மீனவர்கள் வரக்கூடாது என்பதற்காகப் பல ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இந்தியமீனவர்கள்படகுகளுடன் கைது செய்யப்படுகின்றனர்.

இலங்கை கடற்படை திறமையாகச் செயற்படும் போது கேரள கஞ்சாவை இங்கு தடை செய்வது அவ்வளவு கடினமான விடயம் அல்ல.

கொக்கொயின், ஹெரோயின், ஐஸ் போன்ற பல்வேறு போதைப் பொருட்கள் தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்துக்குத் தாராளமாக வருகின்றது. ஆனையிறவு சோதனைச்சாவடி, வவுனியா சோதனைச் சாவடிகளைத் தாண்டி மிகப் பெருமளவிலான போதைவஸ்துக்கள் வருவதுடன் மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் விநியோகம் செய்யப்படுகின்றது.

யாழ்ப்பாணத்து வீதிகளில் சோதனைச் சாவடிகளைப் போடுவதால் போதைவஸ்துகளை நிறுத்திவிட முடியாது. கொழும்பிலிருந்து வரும் போதைவஸ்துகளையும் இந்தியாவில் இருந்து வரும் போதைவஸ்துகளையும் இராணுவத்தை வீதியில் போடுவதால் நிறுத்தி விட முடியாது.

பிரதான வீதிகளில் சோதனைச் சாவடிகளைப் போட்டால் உள்வீதிகளால் எவ்வாறு செல்ல முடியும் என்பது அனைவருக்கும் தெரியும். போதைவஸ்தை இல்லாமல் செய்வது நோக்கமா? சோதனைச் சாவடியைப் போடுவது நோக்கமா? என்ற கேள்வி எழுகின்றது. மீண்டும் இங்கு சோதனைச் சாவடிகள் அமைப்பது சாதாரண மக்களைப் பாதிக்கும். வடக்கு மாகாண ஆளுநர் மக்கள் பிரதிநிதிகளாக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை பிரதிநிதிகளை அழைத்துப் பேச முடியும். கூட்டாகத் துறை சார்ந்த தரப்புகள் இணைந்தே பேச முடியும்.

பொலிஸாருக்கும் இராணுவத்துக்கும் போதைப்பொருள் தொடர்பான தகவல் கிடைத்தால் சம்பந்தப்பட்ட போதைப் பொருள் வியாபாரிகளுக்குத் தகவல் வந்துவிட்டது எனச் செய்தி போகின்றது. யாரும் இவர்களை நம்பி போய் தகவல் சொல்வது கடினம். அவ்வளவு விரைவாகப் போதைப்பொருள் கடத்துபவர்களுக்குச் செய்தி செல்கின்றது.

போதைப்பொருள் வியாபாரிகள் தனித்துச் செயற்படுகின்றார்களா அல்லது சட்டம் – ஒழுங்கைப் பாதுகாக்கும் தரப்பின் பாதுகாப்புடன் செயற்படுகின்றார்களா என்ற கேள்விகள் எழுகின்றன.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பாகக் கைது செய்யப்படுபவர் களுக்கு என்ன நடக்கின்றது என்பது தெரியவில்லை. அவர்களுக்குஎன்னஅடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்யப்படுகின்றது என்பது தெரியவில்லை. அவர்கள் எவ்வாறு வெளியில் வருகிறார்கள் என்ற கேள்வி எழுகின்றது – என்றார்

